**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 284/2022**

**Dated:17.12.2025**
**Deposition of Witnesses for PW -3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.திபாகர் | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**8, 9 எதிரிகள் ஆஜர் 11 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார் மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை . இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**As per the circular of the Hon’ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verfied with their identity card.**
**Aathar card of the Witness verfied.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:-**

நான் தற்போது திருச்சி மாவட்டத்தில் CBCID SIT சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020 ம் ஆண்டு ராமநாதபுரம் மாவட்டத்தில் தீவிர குற்ற தடுப்பு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணி புரிந்த போது மாவட்ட கண்காணிப்பாளரின் பிரத்யேக போன் நம்பரான 9489919722 என்ற எண்ணிற்க்கு Afganistan போதை பொருட்கள் Bangalore ல் இருந்து கோவை வழியாக ராமநாதபுரம் மாவட்டத்தில் தொண்டி கடல் வழியாக இலங்கைக்கு கடத்தப்படுவதாக 2020 மே மாதம் முதல் தகவல் வந்ததன் பேரில் ராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் 8 தனிப்படைகள் அமைத்தார்.கடந்த 20.05.2020 ல் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் பிரத்தேக எண்ணிற்க்கு இன்று TN 63 T9082 என்ற

ஆட்டோவில் போதை பொருட்கள் இளையான்குடியிலிருந்து கோவிந்தமங்கலம் வழியாக தொண்டி அஜ்மீர் அவர்கள் மூலம் இலங்கைக்கு கடத்த உள்ளதாக கிடைத்த தகவலின் பேரில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில் இரண்டு குழுக்களாக பிரிந்து ஒரு குழுவில் நானும் சார்பு ஆய்வாளர்கள் நவநீத கிருஷ்ணன், செந்தில் குமார் மற்றும் குகனேஷ்வரனும் மற்றொரு குழுவில் சார்பு ஆய்வாளர்கள் தங்க முனியசாமி, யேசுதாஸ், சதீஸ்குமார் மற்றும் முத்து முனியசாமி, போலீஸ் பார்ட்டி விகிதம் பிரிந்து கண்காணிப்பில் இருந்து வந்தோம். அன்று 20.05.2020 ம் தேதி மாலை சுமார் 6 மணி அளவி'ல் கோவிந்த மங்கலம் விலக்கு அருகே முப்பையூர் செல்லும் ரோட்டில் TN 63 D 9081 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவை மறித்த போது அதை தொடர்ந்து வந்த இரண்டு இருசக்கர வாகனங்கள் எங்களை கண்ட உடன் திரும்பி வந்த வழியிலேயே செல்ல முயற்சித்தன. அதில் மஞ்சள் நிற Scooty TN 63 BV1471 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை சார்பு ஆய்வாளர் செந்தில் குமார் அவர்கள் விரட்டி பிடித்தார். மற்றொரு வாகனமான கருப்பு நிற Pulsar தப்பிச் சென்றது. மேலும் நாங்கள் தடுத்து நிறுத்திய ஆட்டோவில் ஓட்டி வந்த அப்துல் அதன் பின்னால் அமர்ந்திருந்த நபர்கள் 1.அருள்தாஸ் 2, கேசவன், 3, அஜ்மல் கான் ஆகும். பின்னால் இருந்த அருள்தாஸ் கையில் கருப்பு நிற வெள்ளை புள்ளி வைத்த பேக்கில் சுமார் 4 கிலோ எடைக்கொண்ட பொடியும், 1/2 கிலோ வெள்ளை பிளாஸ்டிக் பையில் பொடி போன்ற பொருளும், பச்சை நிற கல்லும் சுமார் 30 கிராம் கறுப்பு பசை போன்ற பொருளும், சுமார் 50 கிராம் சிறு கண்ணாடி துகள் போன்ற பொருளும் இருந்தது.பின்னால் வந்த Scooty இரு சக்கர வாகனத்தில் வந்த முத்து ராஜா மற்றும் சுரேஷ்குமார் ஆகியோர்களை விசாரிக்க அவர்கள் தங்களுக்கு ஒன்றும் தெரியாது என்றும் ஆட்டோவில் வந்த அருள்தாஸ் தான் எங்களை அழைத்து வந்தார் என்றும் சொன்னார்கள். சுரேஷ்குமார் வைத்திருந்த பையை வாங்கி திறந்து பார்த்த போது அதில் எடை போடும் இயந்திரமும் மற்றும் Plastic Cover யை Seal வைக்கும் இயந்திரம் மற்றும் ஒரு பச்சை நிற மூடி போட்ட டப்பாவில் 3 மாத்திரைகளும் இருந்தன. அந்த மாத்திரையை பற்றி விசாரிக்கும் போது அது MDMA போதை மாத்திரை

என்றும் அதை எங்கள் பயன்பாட்டிற்க்காக அருள்தாஸ் இடம் வாங்கியதாக தெரிவித்தார். பின்னர் ஆட்டோவில் இருந்தவர்களை இறக்கி விட்டு ஆட்டோவை சோதனை போட்ட போது ஆட்டோவின் பின்புறம் இருந்த ஒரு கட்டை பையில் 9 வெள்ளை நிற பிளாஸ்டிக் பையில் 1001 Kabul Afganistan (South Asia) என்று ஆங்கிலத்திலும் அரபி எழுத்துகளில் சில வார்த்தைகளும் எழுதி இருந்தது. அந்த அரபி எழுத்துக்கள் எனக்கு புரியவில்லை. இது தொடர்பாக கேட்ட போது இவை அனைத்தும் மாவு பாக்கெட்டுகள் என்றும் அவை சித்த வைத்திய சாலைக்கு எடுத்து செல்வதாக முன்னுக்கு பின் முரணாக கூறினார்கள். பின்னர் அதே ஆட்டோவில் வந்த அருள்தாஸை ஆட்டோவிற்க்கு அடுத்து சற்று முன்னால் போக சொல்லி விட்டு அவரை தனியாக விசாரித்தோம் . அப்போது அவரிடம் உண்மையை கூறுமாறு கேட்டோம் , அதற்கு அருள்தாஸ் இந்த பொருட்கள் அனைத்தும் போதை பொருட்கள் தான் என்றும் அருள்தாஸ் தன் கையில் வைத்திருந்த கருப்பு நிற பையில் 4 கிலோ Methemoglobin , 1 கிலோ Ambathamine பச்சை நிற கல் Heroine என்றும் 50 கிராம் Methapetamine மற்றும் கருப்பு நிற பசை போன்ற பொருள் Opium என்று கூறினார். மேலும் பின்னால் இருந்த கட்டை பையில் 3 ஒரு கிலோ மற்றும் 6 அரை கிலோ Methemoglobin போதை பொருள் என்றும் இவை அனைத்தையும் வாங்குவதற்க்காக Arasoor அருகே சிகப்பு நிற காரில் அப்துல் கலாம் ஆசாத் , அப்துல் வகாப், மற்றும் அஜ்மீர் கான் காத்து கொண்டிருப்பதாகவும் அவர்களிடமிருந்து அட்வான்ஸ் தொகையாக ரூபாய் 2 லட்சம் பெற்றுக் கொண்டதாகவும் எங்களிடம் கூறினார். பின்னர் சார்பு ஆய்வாளர் நவநீத கிருஷ்ணன் மற்றொரு குழுவான தங்க முனியசாமி அவர்களுக்கு தகவல் கொடுத்து Arasoor அருகே காருடன் இருக்கும் மூன்று நபர்களை பிடிக்க சொல்சி தகவல் கொடுத்தார். பின்னர் நவநீதி கிருஷ்ணன் சார்பு ஆய்வாளர் Arasoor சென்று காருடன் இருந்த 3 நபர்களையும் 30 கிராம் Methemoglobin யையும் பிடித்து கோவிந்த மங்கலம் சம்பவ இடத்திற்க்கு அழைத்து வந்தார். அங்கு வைத்து பொதுமக்கள் யாரும் சாட்சி சொல்ல வராததால் காவலர்கள் பாண்டியராஜ் மற்றும் ராஜ்குமார் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்தார்கள்.பின்னர் அந்த 3 நபர்களையும் விசாரித்து அருள்தாஸிடம் இந்த போதை பொருட்களை

பெற்று ஏற்கனவே சென்னையை சேர்ந்த நிஷார் அலியிடம் வாங்கிய சுமார் 1.5 டன் 36 எண்ணிக்கை கொண்ட செம்மரக்கட்டைகளை தொண்டி சோழியக்குடியை சேர்ந்த அஜ்மீர் அவர்கள் வள்ளத்தில் வைத்திருப்பதாகவும் இது தொடர்பாக ராமநாதபுரம் காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்கள் உத்தரவின் பேரில் சம்பவ இடத்திற்க்கு விரைந்து வந்த திருவாடனை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் திரு புகேழந்தி கணேஷ் அவர்கள் வந்தார்கள். அவர்களிடம் எங்கள் குழுவின் சார்பு ஆய்வாளர் நவநீத கிருஷ்ணன் அவர்கள் மேற்சொன்ன சம்பவத்தை புகார் ஆகவும் அதனுடன் அத்தாட்சியை இணைத்து மேல் நடவடிக்கைக்காக கொடுத்தார். இது சம்மந்தமாக திருவாடணை DSP என்னை விசாரித்தார். விவரம் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

இல்லை

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.